# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.19/2007

வாதி தரப்பு 3 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.சத்தியவதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜய் வா.சா.–3 | | |
| த/பெ. | மைக்கேல் | | |
| கிராமம் | மலைப்பட்டி | தொழில் | Software |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 45 |

---

முதல் விசாரணை 05–08–2026

நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியமளிக்க இன்று ஆஜராகியுள்ளேன். அழைப்பாணை சார்பு நகல் **சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஆதார் அட்டை நகல் **சா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது ஆதார் முகவரியில் உள்ளது சேரன்மகாதேவியில் உள்ள என் சொந்த வீட்டு முகவரி நான் தற்போது வேலை விசயமாக மலைப்பட்டியில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன்.

இந்த வழக்கில் சாட்சியமளிக்க அழைப்பாணை வந்துள்ளதா என்றால் ஆமாம். நான் வசிக்கும் வீட்டின் கதவு எண் சொல்ல முடியுமா என்றால் 3/479 A மலைப்பட்டி கிராமத்தில் உள்ளது. நான் சந்திரபிரபாவதி என்பவர் வீட்டில் வாடகைக்கு உள்ளேன். நான் மேற்படி வீட்டிலிருக்கும்போதுதான் நீதிமன்ற ஊழியர் வந்து அழைப்பாணையை கொடுத்து சென்றார். சந்திரபிரபாவதி என்பவருக்கு மாத வாடகை எவ்வளவு கொடுக்கிறேன் என்றால் தொடக்கத்தில் 500 ரூபாயும் கடந்த 3 வருடமாக ரூ.700 கொடுக்கிறேன். எத்தனை வருடங்களாக வாடகைக்கு இருக்கிறேன் என்றால் 2010லிருந்து வாடகைக்கு இருக்கிறேன். அதற்கு முன்பு அதே ஊரில் வேறு வீட்டிலிருந்தேன். வாடகை ஒப்பந்தம் வாய்மொழியானதா? எழுத்துமூலமானதா என்றால் வாய்மொழியானது. என்னுடைய வீட்டுடன்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

சேர்ந்து எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 3 வீடுகள் உள்ளது. மீதி இரண்டு வீட்டில் கிழக்கு பக்கம் ஒரு பாட்டி குடியிருக்கிறார் மேற்குபக்கம் ஸ்டோர்ரூமாக சந்திரபிரபாவதி பயன்படுத்துகிறார். அருப்புக்கோட்டை ஏரியாவில் உள்ள பள்ளி கல்லூரிகளுக்கு Software செய்து கொடுக்கிறேனா என்றால் முன்பு செய்துகொடுத்தேன் தற்போது திருநெல்வேலி, நாகர்கோவில் பகுதிகளில் மேற்படி தொழில் செய்கிறேன். வாடகையை மாதம்மாதம் ரொக்கமாக சந்திரபிரபாவதி அவர்களின் கையில் கொடுத்துவிடுவேன்.

2,3 ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S